**தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்பு அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை கடற்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய வருடத்தின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு திருத்தப்பட்ட பெறுமதிகள், நிதிச் செயலாற்றல் கூற்றில் தொடர்புடைய பெறுமதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தது என குறிப்பிட முடியாது.

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் ரூபா 16,955 மில்லியன் 2019 ஆம் ஆண்டின் கணக்குகளுக்கு ஆரம்ப மீதியாக எடுக்க தவறியிருந்தது. | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்படும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆம் மீதியின் பெறுமதியினை காண்பிக்கும் போது கணக்கீட்டு வழுவொன்றினால் கைவிரலொன்று இடம்பெற்றிருந்ததுடன் அவை இனங் காணப்பட்டு சொத்துக்களின் கீழ் உள்ளடக்குவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இறுதி மீதியானது ரூபா 6,076.73 மில்லியனான போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதி ரூபா 8,812.79 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,736.06 மில்லியன் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்திலும் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் சிகாஸ் மென்பொருளுக்கு உள்ளடக்குவதற்கும் வழுக்களை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு பிணை வைப்பதற்குஉரிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய வகையில் உரிய காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின்3.7 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்குதலில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்குஇணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | இணக்கமின்மைகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு** | **இணங்கமின்மைகள்** | | |
| (அ) | 1916 இன் 33 ஆம் இலக்க துப்பாக்கிகள் கட்டளைச் சட்டம் முதல் 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் அதிகாரச்சட்டம் வரையில் 10 திருத்தங்களை உள்ளடக்கிய 182 ஆம் அதிகாரத்தின் 51, 05(1), 23(3), 22(2)(எ) பிரிவுகள் | உயிர் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பிற்காக விவசாய மற்றும் விவசாயமல்லாத பணிகளுக்காக 04 மாவட்டங்களில் வழங்கப்படும் 12 கல் வெடிகள் மற்றும் 16, துப்பாக்கிகள் 2288 தொடர்பில் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நீண்டகாலமாக அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிக்காத தொடர்பில் மாவட்டத்தின் செயலாளர்கள் மற்றும் மாவட்டத்தின் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்குஅறிவிப்பதற்கும் உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் 2018.12.18 ஆந் திகதிய PFD/DEF/103/ GN/2018(2) | முப்படைகளினால் கைப்பற்றப்பட்ட வாகனங்களை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்விற்கு உரிய மதிப்பாய்வு பணிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட | திறைசேரியினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட எல்லையினுள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அது தொடர்பில் விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க கடிதம் | எல்லையினை மிகைத்து மீளாய்வாண்டின் போது ரூபா 3.08 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டிற்குரியதாக 65 பிரிவுகளைக் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தொற்றுநோய் நிலைமை காரணமாக மதிப்பாய்வு பணிகள் தாமதமடைந்துள்ளன. |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் ஆண்டின் அரச நிர்வாகச் சுற்றறிக்கை 5 மற்றும் 6.1 ஆம் பந்தி | மனிதவள திட்டத்தினுள் பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் வருடமொன்றிற்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையான பயிற்சியொன்று வழங்கும் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10.03.07.05 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் - அரச பாதுகாப்பு அமைச்சின் மீளாய்வாண்டிற்கான அனுமதிப் பத்திர கட்டண வருமான மதிப்பீட்டானது ரூபா 11.4 மில்லியன் ஆகும். கடந்த வருடத்திற்கு ஒப்பாக அது 50 சதவீதத்தினால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 22.77 மில்லியன் ஆகும். | வருமான மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கிடைத்த வருமானத்தினை கருத்திற் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீமொன்றை அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 1.128 மில்லியன் நிலுவை அனுமதிப்பத்திர கட்டண வருமானங்கள் காணப்பட்டன. அவற்றுள் ரூபா 0.304 மில்லியன் தொகையானது இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக காணப்பட்டது. | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 261/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தினை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தினை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் தொடர்பில் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் தெரியப்படுத்து வதற்கு மற்றும் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்தினை அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஈடீ/04/08/01/59 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்யவேண்டிய போதிலும், 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தில் துப்பாக்கி அனுமதிப்பத்திர கட்டணங்கள் நீண்டகாலமாக திருத்தப்பட்டிருக்க வில்லை. | 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் அதிகாரச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரமாணங்களினை விதிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்படும் வகையில் ஆயுதங்கள் அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்காகவும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | 20.03.06.00ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் மீளாய்வாண்டின் சமாதான ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 3,850 மில்லியன் ஆன போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானமானது 1,681.41 மில்லியனாக அல்லது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 43.67 சதவீதமாக காணப்பட்டது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறைச் சாத்தியமான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | வருமான மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்காக அரச நிதி கொள்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | இலங்கை இராணுவத்தில் ஆவணங்கள் மற்றும் சூடான் அரசின், இலங்கை விமானப் படை மத்திய ஆப்பிரிக்கா மற்றும் தென் சூடானில் சமாதான ஒத்துழைப்பு பணிகளில் ஈடுபட்டமைக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 2,404.35 மில்லியன் வருமானம் நிலுவையாக காணப்பட்டது. அவற்றுள் இலங்கை விமானப் படையினால் மத்திய ஆப்பிரிக்க செயற்பாட்டு | நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கும் நிலுவை வருமானங்களை உரியவாறு அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதனுடன் | குறித்த நிறுவனத்திற்கு அறிவித்து சிறந்த இணைப்பொன்றினை பேணியவாறு நிலுவை வருமானத்தினை மேலும் சேர்வதனை தடுப்பதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக அறவிடப்பட வேண்டிய தொகைரூபா 1,563.19 மில்லியனாக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 280.07 மில்லியன் மற்றும் ரூபா 585.60 மில்லியன் முறையே 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரியன ஆகும். | தொடர்புடைய பின்தொடர்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் வேண்டும். | |
| (ஊ) | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் சமாதான முன்னெடுப்பு வருமானம் மற்றும் அமைச்சின் அனுமதிப்பத்திரக் கட்டணம் உள்ளடங்கலான 05 வருமான தலைப்புக்களின் வருமானங்களினை சேகரிக்கும் செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந்திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2014 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | இலங்கை இராணுவம் மாலி அரசினுள் சமாதான ஒத்துழைப்பு கடமைகளை மேற்கொண்டமைக்காக கிடைத்த ஐக்கிய அமெரிக்க டொலர் 6,604,752 அல்லது ரூபா 1,197.96 மில்லியன் வருமானம் வருடாந்த மதிப்பீடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கிய நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாலி அரசின் ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை முன்னெடுப்பு பணிகளில் ஈடுபட்டமைக்காக கிடைக்க வேண்டிய வருமானத்தினை நிதிக் கூற்றுக்களை தயாரித்த பின்னர் மதிப்பிட்டு இலங்கை இராணுவத்தினால் அமைச்சிற்கு வழங்கப்பட்டமையின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியாதுள்ளது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 47 மூலதன செலவின விடயங்களுக்கு உரிய ரூபா 1,081.89 மில்லியன் மற்றும் 79 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய ரூபா 434.09 மில்லியன் சேமிப்பு காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50(11) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகள் கூடியளவு முழுமையாகவும் சரியானதாகவும் | போதியளவான கட்டுநிதி கிடைக்காமை, அமைச்சின் அலுவலக செலவினங்களை மேற்கொள்ள நேரிடாமை மற்றும் வருடத்தின் நடுப்பகுதியில் மூலதன |

| | | | |
|---|---|---|---|
| | அந்த சேமிப்பானது ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் 10 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | தயாரிக்கப்பட வேண்டியதுடன் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். | செலவினங்கள், மீண்டெழும் செலவினங்களை மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. |
| (ஆ) | மீண்டெழும் செலவின விடயங்கள் நான்கினதும் மூலதன செலவின விடயங்கள் பத்தின் முறையே ரூபா 1.65 மில்லியன் மற்றும் ரூபா 23.65 மில்லியனான நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது. மேலும், செலவின விடயமொன்றின் ரூபா 36 மில்லியனான குறைநிரப்பு ஏற்பாடும் முழுமையாக எஞ்சியிருந்தது. | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டினை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். செலவினம் எழும் போது அவை நிச்சயப்படுத்தப்பட்ட பின்னரே நிதியேற்பாடுகள் கோரப்பட வேண்டும். | பாதுகாப்பு அமைச்சின், அரச அமைச்சு அலுவலகங்களின் உத்தேச செலவினம் ஏற்படாமை மற்றும் ஊடக நிலையம் இரத்துச் செய்யப்பட்டமை, வாகனங்களை கொள்வனவு செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை ஆகிய காரணங்களினால் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. |
| (இ) | அத்தியாவசியமான மற்றும் நிதியேற்பாடுகள் போதியளவில் காணப்படாமை போன்றவற்றை அடிப்படையாகக் குறிப்பிட்டு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 23 கோரிக்கைப் பத்திரங்கள் மூலம் நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தது. எனினும், அவற்றுள் ரூபா 39.41 மில்லியன் கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றம் செய்யப்பட்ட நிதியேற்பாடு உரிய முறையில் மாற்றப்பட வேண்டும். | தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் குறித்த நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன. |
| (ஈ) | வெளிநாட்டு மாநாடொன்றிற்கு உத்தியோகத்தரின் பங்குபற்றலினை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டமையினால் அழைப்பு விடுத்த நாடு செலவினத்தை மேற்கொள்ளாத காரணத்தினால் குறித்த உத்தியோகத்தருக்கு வெளிநாட்டுப் பயணத்திற்காக ரூபா 979,365 தொகை அமைச்சினால் செலவிட நேர்ந்திருந்தது. | சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறித்த நிறுவனத்திற்கு பிரதிநிதித்துவத்தை அறிவிக்கும் போது தாமதம் ஏற்பட்டது. அதன் பிரகாரம் நிதியேற்பாடு அமைச்சினால் ஏற்கப்பட்டது. |

**2.3 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் சேவையில் ஈடுபட்டிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணிநீக்கத்திற்கு உள்ளான மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய 150 உத்தியோகத்தர்களின் ரூபா 8.87 மில்லியன் கடன் மீதி அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவற்றுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதியானது ரூபா 3.23 மில்லியன் ஆகும். | 2019 யூன் 27 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடனை அறவிடுவதற்கு உரிய அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு அவற்றுள் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை பதிவழிப்பதற்கும் அரச நிதித் திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 04 வைப்புக் கணக்குகளின் இரு வருடதங்களை விஞ்சிய ரூபா 169.9 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. அவ்வாறே நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது 02 வைப்புக் கணக்குகளின் ரூபா 0.49 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2 வருடங்களை விஞ்சிய நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றும் ஏனைய வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு அமைச்சின் பணிகள் மற்றும் செயற்பணிகளின் கீழ் வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் தொடர்பிலான சனாதிபதி செயலாளரின் பங்குபற்றலுடனான அந்த விடயத்துடன் தொடர்புடைய அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் பரிந்துரைக்கப்பட்ட வெடிப்பொருட்கள் தொடர்பில் அறிமுகப்படுத்தலை வழங்கும் சுற்றறிக்கை இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெடிபொருட்களினை தவறான முறையில் கையாளுவதற்கு உள்ள வாய்ப்பினை குறைக்கும் வகையில் நாளாந்தம் தேவைப்படும் நிதியேற்பாட்டினை போதியளவில் திட்டமிடல், பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை யொன்றினை நிறுவுதல் மற்றும் அதன் மூலம் உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பினை வலுவூட்டுதல், பொருத்தமான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியன இடம்பெற வேண்டும். | சுற்றறிக்கையினை நடைமுறைப் படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது . |
| (ஆ) | முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வெளிவாரி தரப்பினர்களுக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய விகிதம் தொடர்பில் முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஒக்தோபர் மாதம் 26 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக சான்றுப்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமப/1610738/703/033 ஆம் இலக்க 2016 மே 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மாலி அரசாங்கத்தில் விசேட செயலணியின் இராணுவ அணியொன்றினை நிருவவுதற்காக உரிய கொள்வனவுகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டு 320 உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போதும் 2019 ஆம் ஆண்டின் போதும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த விசேட படையணி ஐக்கிய நாடுகளின் சமாதான ஒத்துழைப்பு பணிகளுக்கு இணைவதில் தொடர்ந்தும் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 880.73 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஐக்கி நாடுகளின் ஒத்துழைப்பு பணிகளில் ஈடுபடுவதற்கான விசேட செயலணியொன்றை நிறுவுதல் தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஆரம்ப இணக்கப்பாட்டின் பிரகாரம் செயற்பட்டு அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | பெறுகைகளுக்காக உரிய அங்கீகாரங்கள் கிடைப்பதிலான தாமதங்கள் நிதியேற்பாடுகள் கிடைக்காமை மற்றும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் ஆகியன தாக்கமளித்திருந்தன. |
| (ஈ) | அமப/16/0498/7003/017 ஆம் இலக்க மற்றும் 2016 மார்ச் 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசிற்கு அறிவிப்பதற்காக இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தினை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்திற்கு உரிய அதிகாரச் சட்டமொன்று 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினை தாபிப்பதற்கு உரிய அதிகாரச்சட்டத்தினை அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் கிடைத்துள்ள அங்கீகாரங்களின் பிரகாரம் நிரந்தர பதவியணி யொன்றினை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகாரச்சட்டம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வாறு உள்ளன. |

**3.2 உத்தேச அடைவ மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) ஆரம்ப கற்கையொன்றினை மேற்கொண்டு குறித்த அங்கீகாரத்தினைப் பெற்று ரூபா 5.47 மில்லியன் தொகையில் நிர்மாணங்களை மேற்கொண்டதன் பின்னர் இட அமைவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக 03 கோபுரங்களின் இட அமைவுகள் மாற்றப்பட்டிருந்தன. | முன்பெறுகைகள் பணிகளின் கீழ் நிர்மாணத்திற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள வேலைத் தளம் தொடர்பில் பொருத்தமான கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டும். செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் சிக்கனமற்ற கிரயம் இனங்காணப்படல், அவற்றை குறைத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். யாழ்ப்பாணம் மற்றும் குருணாகல் ஆகிய இடங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்தல் தோல்வியில் அமைந்தது. பாணம நாவுக்க முகாமில் கோபுரமொன்றினை நிர்மாணித்தமையால் அந்த இடத்தினை மாற்றும் தேவை ஏற்பட்டது. |
| (ஆ) ரூபா 35 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 22 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | கோபுரங்கள் அமைந்துள்ள இடங்களில் மின்பிறப்பாக்கி கூடங்களை அமைத்து இயந்திரங்களை நிர்மாணித்து உத்தேச நோக்கங்களுக்கு பயன்படுத்த துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். குறித்த மின்பிறப்பாக்கி இயந்திரங்களை உரிய முறையில் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் நிதியேற்பாடுகளை நிதியேற்பாடுகளிலான பயன்பாடு 45 சதவீதம் ஆகும். அது 2014 ஆம் அண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும்3 சதவீதம் முதல் 17 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | வருடாந்த பாதீட்டு ஏற்பாட்டினை செயற்திட்டப் பணிகளுக்கு உச்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டத்திற்கு உரியதாக பொருத்தமான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஈ) | தொடர்பாடல் கோபுரங்களுக்காக உரிய நிறுவனங்களின் அங்கீகாரம் கிடைத்து சுமார் 02 வருடங்கள் வரை தாமதம் ஏற்பட்டிருந்த காரணத்தினால் கோபுரங்களினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தினை கையளித்தல் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது முடியாதுபோயிருந்த காரணத்தினால் மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட நுண்ணலை கட்டமைப்பின் பெறுகை நடவடிக்கைகள் இரு சந்தர்ப்பங்களில் விலைக் கேள்வி கோரப்பட்டு மதிப்பீடு கட்டத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை அந்த மதிப்பீடுகளின் நாளர்வரையான தன்மை, அமைப்புக் குறிப்பீடுகளின் பொருத்தமான தன்மை, | ஒட்டுமொத்த செயற்திட்ட திட்டத்தினை நாளதுவரை யாக்குதல் மற்றும் எதிர்வரும் வருடங்களுக்கு உரிய நிதியேற்பாட்டு தேவைப்பாடுகளை காண்பிக்கும் நிதி திட்டமொன்றினை தயாரித்து உரிய காலப்பகுதியினுள் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்து உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்தல். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது அந்தந்த பிரிவுகளினுள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக அமைந்தன. குறித்த தாமதத்தினை கருத்திற் கொண்டு செயற்திட்டத்தின்கால எல்லையினை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. |

விலைக் கேள்வியாளரின் இணக்கமின்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெறுகையானது நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் முப்படைகள் உள்ளடங்கலான பொலிஸ் சேவைகளின் தொடர்பாடல் தேவைப்பாட்டிற்கு தேவையான தரவு மூல உதவி மூலோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எனினும், மேலும், 04 வருட காலத்தினை பெற்றுள்ள போது அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படாமையினால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் தொடர்ந்தும் தாமதங்கள் நிலவின.

**3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிக்கையினை 2020 செப்டம்பர் 16 ஆந் திகதிய சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 உள்நாட்டு நிதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) முப்படைகளின் தலைமையகங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | | |
| 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், முப்படை தலைமையக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் பணிகளில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 56.4 சதவீதம் ஆகும். அதன் கட்டம் 1 இன் கீழான பாதுகாப்பு அமைச்சு, கடற்படை மற்றும் விமானப் படை தலைமையக கட்டிடங்களின் செயன்முன்னேற்றம் 50 சதவீதமான மட்டத்திலும் கேட்போர் கூடத்தின் நிர்மாண செயன்முன்னேற்றம் 8 சதவீதமான குறைந்த அளவிலும் காணப்பட்டது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் நிர்மாண முகாமைத்துவ அலகு செயற்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டின் முன்னுரிமை கட்டம் 10 இன் கீழ் 192 ஒப்பந்தங்களுக்காக ரூபா 12,291 மில்லியன் நிதித் தேவைப்பாட்டினை குறிப்பிட்டு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பாதீட்டு மதிப்பீடு ரூபா 4,070 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டு ஆண்டினுள் ரூபா 3,990 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் நிர்மாண முகாமைத்துவ அலகு செயற்திட்டத்தின் உத்தேச இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் பெறுகைகள் திட்டத்தின் போதியளவான நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமை, இரத்துச் செய்யப்பட்டமை தற்காலினகமாக கைவிடப்பட்டமை ஆகிய காரணங்களால் 19 பணிகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் உரிய பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செயற்திட்டத்தின் 05 ஒப்பந்ததாரர்களால் ரூபா 674.25 மில்லியன் தொகையான 17 காலநீடிப்பு கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டிருந்ததுடன் அவற்றுள் ஒரு ஒப்பந்தக்காரருக்கு 5.18 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பணிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி மேலதிக உரித்துக் கோரலினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2014 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட வேண்டிய செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 25,645 மில்லியன் ஆகும். அவற்றுள் ரூபா 23,711 பெறுமதியான பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவ தலைமையகம் நீங்கலாக ஏனைய அலுவலகங்கள் இதுவரையிலும் தலைமைய கட்டிடத் தொகுதியினுள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்து உத்தேச அலுவலகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 612 ஆம் அதிகாரத்தின் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச்சட்டம் மற்றும் நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணைகளை வைக்க வேண்டிய போதிலும், அமைச்சின் உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போதும் பிணை வைத்திருக்கவில்லை. | 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர் களின் பிணை வைத்தல் கட்டளைச் சட்டம் மற்றும் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) யுத்தம் இடம்பெற்ற போது பயங்கரவாதிகள் வசமிருந்த பாதுகாப்பு படையினால் கைப்பற்றப்பட்ட 1880 வாகனங்கள் தொடர்பில் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பின்புல அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிராமை, அறிக்கையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை, கைதவிர்ப்பு மற்றும் சுவீகரித்தல் ஆகியவற்றிற்கு அமைச்சிற்கு அதிகாரம் சாட்டப்பட்டமை உறுதிப்படுத்தப்படாதிருந்தைம போன்ற பிரச்சினைக்குரிய நிலைமைகள் காணப்பட்டன. | சொத்துக்களின் உரித்தினை கையேற்றல் மற்றும் கைதவிர்ப்பு பணிகளுக்காக பின்புல அறிக்கை யொன்றினை தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பின்புல அறிக்கையொன்று தயாரிக்கப்படவில்லை. மதிப்பாய்வு அறிக்கையில் ஏற்பட்ட அச்சீட்டு வழு காரணமாக மீள பரிட்சிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் ஆரம்ப மதிப்பாய்வின் போது கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட 70 வாகனங்களில் 57 வாகனங்கள் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்திற்காக கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள கட்டிடமொன்று 2019 சனவரி முதல் ஒரு வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் ரூபா 40 மில்லியன் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அலுவலகமொன்றின் தேவைப்பாட்டினை முன்கூட்டி இனங்காணப்பட்டுள்ள போது அச்சீட்டு ஊடகங்களின் மூலம் அறிவித்தல்களை மேற்கொள்ளாது மற்றும் முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை பெற்றுக் கொள்ளாது சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கூறுவிலைகளில் ஆகக்குறைந்த கூறுவிலை தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் இனங்காணப்பட்ட பொறியியல் சேவைகளை உள்ளடக்கி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 13 மில்லியன் நிதி நலனை அமைச்சு இழந்திருந்தது. | கிரயத்தினை கருத்திற் கொண்டு அச்சீட்டு ஊடகங்களின் மூலம் அறிவித்தல்களை மேற்கொண்டு அரசிற்கு உச்ச பொருளாதார நலன் கிடைக்கும் வகையிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு உகந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு மேலதிகமாக பொறியியல் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக சுமார் ரூபா 12 மில்லியன் கிரயத்தினை மேற்கொள்ள நேரிடுவதுடன் அதற்காக ஆகக்குறைந்தது 03 மாத காலம் எடுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ii) | மேலும், கட்டிடமானது பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் தளத்தில் 03 கொங்கிறீட் தூண்கள் மற்றும் கொங்கிறீட் படிகள் வெடிப்புக்குள்ளாகி இருந்தமையால் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. | கட்டிடத்தினை வாடகைக்கு எடுக்கும் போது தொழில்நுட்ப ரீதியிலான யோக்கிதை பரிசோதனை அறிக்கை யொன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு அனுப்பப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு 01 முதல் 03 மாதங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது. | திட்டவட்டமான கால எல்லையினுள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப் படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான தரவு கட்டமைப்பொன்றினை ஏற்படுத்தி இலக்குகளை அடைதல் தொடர்பில் சரியான அறிக்கையிடலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பி/3/ 201 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயன் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு தரவு கட்டமைப்பொன்று பேணிச் செல்ல வேண்டும். | திட்டமிடல் பிரிவினால் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் மீளாய்வாண்டினுள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்காமை, வாகனக் கட்டுப்பாடு, இருப்புக் கட்டுப்பாடு மற்றும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை மற்றும் கணக்கீடு மற்றும் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் கட்டுப்பாட்டு முறைமைகளில் நிலவும் நலிவுகள் ஆகியன சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றினை திருத்தியது தொடர்பில் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

மீளாய்வாண்டின் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணி 447 இன் 348 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் 111 பதவிகளின் வெற்றிடங்களும் 12 பதவிகளின் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டது. அவற்றுள் 13 வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளுக்கு உரியமை ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 65 | 52 | 13 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 09 | 07 | 02 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 237 | 167 | 70 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 136 | 122 | 14 |
| | **மொத்தம்** | 447 | 348 | 99 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உதவி பயிற்சி பொருள் கட்டுப்பாட்டு உதவியாளர் ஒருவரொருவர் பிரதி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவியில் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் 01 பிரதி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவி மற்றும் 02 மேலதிக பிரதி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவிகள் இதுவரையிலும் வெற்றிடமாக உள்ளன. | பயிற்சி பொருள் தொடர்பில் சிவில் பாதுகாப்பு பிரிவுக்கு சாட்டப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை நிறைவேற்றக்கூடிய வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. |
| (ஆ) | உரிய முறையில் நிறுவப்படாத தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்திற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவருடன் 03 பணிப்பாளர்கள் பதவிகள், 1 ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் பதவி மற்றும் 04 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் தற்காலிக நியமனங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு 06 மாத காலங்களுக்கு ஒரு தடவை சேவை நீடிக்கப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டவாறு இருந்தன. | கிடைக்கப் பெற்றுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையில் நிரந்தர பதவியணியொன்றை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்பட்டிருக்க வில்லை. |